DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தவசி | Father/Husband Name : ஸ்ரீராமன் |
| Age : 70 | Village : சந்தையடி, கன்னியாகுமரி |
| Taluk : அகத்தீஸ்வரம் | Calling : சமையல் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 12:04

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீஸ்வரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சமையல் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஸ்ரீதர் எனது மகன் ஆவார். எனது மகன் ஸ்ரீதர் கத்தாரில் கப்பல் நிறுவனத்தில் பணி செய்து வந்தார்.

2. இவ்வழக்கு சம்பவத்திற்கு 3 மாத காலத்திற்கு முன்பாக எனது மகன் ஸ்ரீதர் கத்தாரில் இருந்து எங்களது வீட்டிற்கு வந்திருந்தார். எனது மகன் ஸ்ரீதரின் மனைவி பொன்மலர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராக வேலை செய்து வந்தார். கடந்த 2021ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் அகத்தீஸ்வரத்தில் உள்ள எனது வீட்டிலிருந்து மாலை 05.00 மணிக்கு ஸ்ரீதர் அவருக்கு சொந்தமான புல்லட் இருசக்கர வாகனத்தில் சென்னையில் இருக்கும் அவரது மனைவி மற்றும் குழந்தைகளை பார்ப்பதாக கூறி கிளம்பி சென்றார். அன்று இரவு 11.30 மணிக்கு கோவில்பட்டி - சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த எனது மகன் ஸ்ரீதர் புல்லட்டின் மீது லாரி மோதி விபத்து ஏற்படுத்தி சென்றுவிட்டதாக ராஜலிங்கம் என்பவர் என்னிடம் செல்போனில் தகவல் கூறினார்.

3. நான் வீட்டிலிருந்து கிளம்பி விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகனின் புல்லட் இருசக்கர வாகனம் சாலையின் ஓரத்தில் இருந்தது. அந்த விபத்தில் எனது மகன் உடல் நசுங்கி மூளை வெளியே வந்ததாகவும், சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் போலீசார் தகவல் கூறினார்கள். நான் சாத்தூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று எனது மகனின் உடலை பார்த்தேன். நடந்த சம்பவத்திற்கு போலீசாரிடம் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிய லாரியின் பதிவெண் பற்றியோ, அதன் ஓட்டுனர் பற்றியோ நான் கேள்விப்படவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

5. என்னுடைய மகன் இறப்பு தொடர்பாக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்டு கொடுத்த தாளில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால்

சரிதான். இறந்து போன என்னுடைய மகனும் அவருடைய மனைவியும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். அதனால் என்னுடைய மகன் மன உளைச்சலில் இருந்தார் என்றால் சரிதான். அதனால் என்னுடைய மகன் மது அருந்திவிட்டு ஆங்காங்கே படுத்து கிடப்பார் என்றால் இல்லை, ஆனால் மது அருந்தும் பழக்கம் உண்டு. என்னுடைய மகன் மது போதையில் ஆங்காங்கே விழுந்துகிடப்பார் என்றால் இல்லை. நான் எங்கு வைத்து கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன்.

6. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகன் மது அருந்திவிட்டு கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி சென்றதால் ஏதோ ஒரு வாகனம் என்னுடைய மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டபடி, எங்களுக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.